**TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY**

**COIMBATORE 641 003**

**UNIVERSITY LIBRARY**

**Strengthening of Digital Library and Information Management under NARS (e-GRANTH) under Component I of National Agricultural Innovation Project.**

*Consortium Principal Investigator : Dr. R. Vijayaraghavan, Special Officer (P&PR)*

*Co-Principal Investigator : Dr. N. S. Vannamuthu, Librarian.*



தினகரன் கோவை 14 ஜூன் 2013


## வேளாண் பல்கலை.யில்

# கணினிமய நூலக புதிய திட்டம் துவக்கம்

**கோவை, ஜூன் 14:** கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது :

கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமம் ஆகியவை இணைந்து தேசிய வேளாண்மை புதுமை புகுத்தல் திட்டத்தின் கீழ் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நார்ஸ் – கிரான்ந்த் (இ–கிரந்த்) கணினிமய நூலகம் மற்றும் தகவல் மேலாண்மை வளமூட்டல் என்ற புதிய திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட உள்ளது.

இந்த கணினிமய நூலக மற்றும் தகவல் மேலாண்மை வளமூட்டல் திட்டத்திற்கு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சிறப்பு அலுவலர் விஜயராகவன் ஒருங்கிணைந்த முதன்மை திட்ட ஆய்வாளராகவும், பல்கலைக்கழக நூலகர் வண்ணமுத்து இணை திட்ட ஆய்வாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இத்திட்டத்தை வேளாண் பல்கலையில் செயல்படுத்துவார்கள்.

இப்புதிய திட்டம் குறித்து துணைவேந்தர் ராமசாமி கூறியதாவது: இப்புதிய திட்டத்தினால் வேளாண்மைப் பல்கலைக்கழகம் நூலக பட்டியலை இணையதளத்தில் பெறுவது, நிறுவன அருங்காட்சியகம் ஏற்படுத்துதல் மற்றும் வேளாண்மை பல்கலைக்கழக நூலகத்தில் முன்னேறிய நூலக மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்திட முடியும். நூலகத்தில் கணினி வழியில் பன்முகத்தேடல் மற்றும் தகவல் அறிதல் வசதி 24 பை 7 என்ற கால முறையில் இணையதளங்களில் அளிக்கப்படுகிறது.

இத்தேடல் உலகளவிலான தேடல், அக்ரிகேட் நூலகங்களில் மற்றும் நூலக நிலையிலும் பெறப்படுகிறது. செயல்முறையில் அக்ரிகேட்ல் நூலகத்திற்கு நேரில் சென்று புத்தக வகைப்பட்டியலை பார்த்து விரும்பிய புத்தகததை புரட்டி படிக்கும் அனுபவத்தை தருகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தாம் உள்ள இடத்திலிருந்தே நூலக வலைதளத்தின் மூலம் உபயோகிக்க முடியும்.

பலதரப்பட்ட நூலகங்களில் மதிப்புமிக்க, பழமை வாய்ந்த நூல்திரட்டல்களை கணினியில் இடம்பெறச் செய்து, ஆசிரியர், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு இப்புதிய திட்டத்தின் மூலம் உதவி செய்ய முடியும். இது ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பதாகவும், ஆர்வமேற்படுத்துவதாகவும் அமையக்கூடும். இத்திட்டத்தின் மூலம் அறிவாற்றல் சார்ந்த 10 மில்லியன் மின்னேற்றம் பெற்ற பக்கங்களை சுலபமாக பெறமுடியும். இதன் மூலம் அறிவியல் செய்திகளை சுலபமாகவும், வேகமாகவும் மாணவர்கள் அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு ராமசாமி கூறினார்.

இப்புதிய திட்டம் கோஹா முனனேறிய நூலக மேலாண்மை மென்பொருள் திறந்தவெளி இணைய மூலதனத்தின் வழியே நூலகங்களை ஒருங்கிணைந்த தளத்தில் மாணவர், ஆசிரியர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு செறிந்த மின்னணு சாதன அனுபவத்தை தருகிறது. இவ்வாறு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


தினமலர் 14-6-2013


# வேளாண் பல்கலையில் நவீன கணினி நூலகம்

**கோவை, ஜூன் 14 –** இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்துடன் இணைந்து தேசிய வேளாண் புதுமை புகுத்தல் திட்டத்தில் , கணினிமய நூலகம் திட்டம், வேளாண் பல்கலையில் செயல்பட உள்ளது.

இந்த கணினிமய நூலகம் மற்றும் தகவல் மேலாண்மை வளமூட்டல் திட்டத்துக்கு, வேளாண் பல்கலை வெளியீடுகள் மற்றும் மக்கள் தொடர்பு சிறப்பு அலுவலர் விஜயராகவன் ஒருங்கிணைந்த முதன்மை திட்ட ஆய்வாளராகவும், பல்கலைக்கழக நூலகர் வண்ணமுத்து இணை திட்ட ஆய்வாளராகவும் செயல்பட உள்ளனர்.

வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி கூறுகையில், 'இப்புதிய திட்டத்தினால் வேளாண் பல்கலையில் பல நன்மைகள் ஏற்படும். குறிப்பாக, நூலக புத்தகப்பட்டியலை இணையதளத்தில் பெறுவது, நிறுவன அருங்காட்சியகம் ஏற்படுத்துதல் மற்றும் வேளாண் பல்கலை நூலகத்தில் முன்னேறிய நூலக மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்திட இயலும்.

மேலும், கணினி வழியில் பன்முகத்தேடல் மற்றும் தகவல் அறிதல் வசதி www.egranth.ac.in அல்லது www.agricat.worldcat.org என்ற இணையதளங்களில் அளிக்கப்படுகிறது,'' என்றார்.